சுருக்கம்

மீன்வளம் – வீட்டுவசதி – 2016–2017 – மீனவர்களுக்கான வீட்டு வசதி திட்டம் – ரூ.85.00 கோடியில் 5000 வீடுகள் கட்டுதல் நிர்வாக ஒப்புதல் வழங்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வள(மீன்–3)த் துறை

அரசாணை(நிலை)எண்.40 நாள்.20.2.2017

திருவள்ளுவர் ஆண்டு – 2048
மாசி மாதம்–8

படிக்கப்பட்டது:–

1. மத்திய அரசின் வேளாண் மற்றும் உழவர் நல அமைச்சகம், கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறையின் கடித எண்.27035–19/2015/Fy(IV), Vol.II, நாள்.30.6.2016
2. மீன்வளத் துறை ஆணையரின் கடித ந.க.எண்.17555/சி1/2016, நாள் 22.7.2016, 23.8.2016 மற்றும் 24.1.2017

---

ஆணை:

2016–ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையில் மீனவர்களுக்கென தனியே வீடு கட்டும் திட்டம் செயல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

2. இந்த அறிவிப்பிற்கு இணங்க பார்வை 2–இல் படிக்கப்பட்ட கடிதத்தில், மீன்வளத் துறை ஆணையர் அவர்கள் கடல் மற்றும் உள்நாட்டு மீனவர்களின் வாழ்வாதாரம் மற்றும் பொருளாதார நிலையினை கருத்திற் கொண்டு மத்திய மற்றும் மாநில அரசுகளின் பங்களிப்புடன் கூடிய இந்திய அரசின் நீலப் புரட்சி திட்டத்தின் கீழான ஒருங்கிணைந்த மீனவர்களின் மேம்பாட்டு வளர்ச்சி திட்டத்தில் மீனவர்களுக்கு வீடு கட்டும் திட்டத்தினை செயல்படுத்த அரசுக்கு கருத்துருவினை அளித்துள்ளார்.

3. மீன்துறை ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமாக பரிசீலித்தது. மத்திய அரசின் இந்திரா குடியிருப்பு திட்டத்தில் (Indira Awas Yojana) 25 சதுர மீட்டர் அளவு கொண்ட ஒரு வீட்டினை கட்ட ரூ.1.20 இலட்சம் மதிப்பீடாக இருந்தாலும் ரூ.1.70 இலட்சம் செலவினத்தில் இவ்வரசு செயல்படுத்தி வருகிறது. அதனடிப்படையில், மத்திய அரசின் நீல புரட்சி திட்டத்தின் வழிமுறைகளின் படி மீனவர்களுக்கான ஒரு வீட்டின் பரப்பளவு 25 சதுர மீட்டர் என்பதால் இந்திரா குடியிருப்பு திட்டத்தின் (Indira Awas Yojana) வழிமுறைகளின் அடிப்படையிலேயே அலகு ஒன்றிக்கு ரூ.1.70 இலட்சம் செலவினத்தில் ரூ.60,000/–ஐ மத்திய அரசின் பங்களிப்பாகவும், மீதமுள்ள ரூ.1.10 இலட்சத்தை மாநில அரசின் பங்களிப்பாகவும் கொண்டு 5000 வீடுகளை ரூ.85.00 கோடியில் (ரூபாய் எண்பத்தைந்து கோடி மட்டும்) கடல் மற்றும் உள்நாட்டு மீனவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க நிர்வாக ஒப்புதல் வழங்கியும் மொத்தச் செலவினத் தொகையான

ரூ.85.00 கோடியை முதற் கட்டமாக தமிழக அரசே ஏற்றும் பின்னர் மத்திய அரசின் பங்களிப்பை பெற்று தமிழக அரசின் கணக்கில் வரவு வைக்கவும் முடிவு செய்தும், பயனாளிகளை மீன்வளத் துறை தெரிவு செய்ய ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை அதனை அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தும் என முடிவெடுத்து அவ்வாறே ஆணையிடுகிறது.

4. இத்திட்டத்திற்கான செலவினத்தை கீழ்க்கண்ட கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

2216 வீட்டு வசதி – 80 பொது – 800 ஏனைய செலவு – பன்னிரண்டாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – VI. மத்திய மாநில அரசுகள் பொறுப்பேற்கும் திட்டங்கள் – UA மீனவர்களுக்கு வீடு கட்டுதல் – 09 உதவித் தொகை – 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை
(த.தொ.கு 2216 80 800 UA 0933)

5. பயனாளிகளை தேர்வு செய்த பின் 2016-17-ஆம் ஆண்டிற்கு ஒப்பளிக்கக் கோரும் தேவையான நிதி கோரி உரிய கருத்துருவினை அரசுக்கு அனுப்ப ஆணையர், மீன்வளத் துறை அவர்கள் கேட்டுக் கொள்ளப்ப படுகிறார்.

6. இவ்வாணை நிதித் துறையின் இசைவுடன் அ.சா.கு.எண்.8680/DS(LMP)/ நிதி (காப.பாவ(ம)மீ)/2017, நாள்.20.2.2017-இன்படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ககன்தீப் சிங் பேடி
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
மீன்துறை ஆணையர், சென்னை-6.
இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை, சென்னை-15.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
முதனிலை மாநில கணக்காயர், சென்னை-18/18/9.
அனைத்து மாவட்ட சம்பள கணக்கு அலுவலர்.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்.

நகல்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நிதித் துறை, சென்னை-9.
அரசு முதன்மைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் (ம) ஊராட்சி துறை, சென்னை-9.
நிதி (காப.பாவ(ம)மீன்/வரவு-1/வரவு-II)துறை, சென்னை-9.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
மாண்புமிகு நிதித் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
அரசு செயலாளரின் தனிச் செயலாளர், கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை, சென்னை-9.
தேசிய தகவல் மையம், சென்னை-9.
இருப்பு கோப்பு / உதிரிகள்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

20/2/17
பிரிவு அலுவலர்